1

எப்போதும் போல் இந்த இரவு தனிமையால் அடர்திருந்தது

எப்போதும் போல் இந்த இரவிலும் நீ வரவேயில்லை

எப்போதும் போல் இந்த இரவில் நான்அழுதபடியிருகிறேன்

எப்போதும் போல் இந்த இரவில் என் மிருகம் விளித்தது

எபோதும் போலல்லாமல் இந்த இரவில் நன் என்னை தற்கொலைசெய்தேன்

2

மறக்கமுடியாத அந்த இரவின் கதையை

நான் தொடங்கினேன் திரவங்கள் வழியும்

கோப்பைகளையும் ,கண்களையும் விட்டு வெளியேறி

அவளின் அன்பை ஒரு நாய் போல் பதறியபடி தின்றேன்

அவளின் கதை நன் கேட்காத ஒன்று

வற்றாத அன்பை ,முடியாத காதலை

ஒரு நதி போல் சொல்லிக்கொன்றிருந்தாள்

அந்த நதி நான் கேட்க்காத இசை

3

நேற்று நான் மீண்டும் ஒரு வண்ணத்துபூச்சியை

பார்த்தேன் -அது அணிலோடு பேசிகொன்றிந்தது

அதன் நிறத்தை எனுலகத்தில் படரவிட்டேன்

அப்போதுதான் சூரியன் நிறம் மாறுவதை கண்டேன் .

இனி எப்போதும் அந்த வண்ணத்துபூச்சி என் அன்பை அணிந்த

படி திரியும்- நான் அதன் நீறங்களை சுமந்த படி ....

யாரும் நம்பமுடியாதபடி அதன் மெல்லிய சிறகால்

எனை சுமந்தபடி சென்றது

4

செவிகளின் காலம் முடிந்துபோன இரவொன்றில்

நீ இசைத்து கொண்டு இருந்தாய் சில இசை மாதிரிகளை

எம்மோடு அடிய சொக்கட்டான்கள் விரவிக்கிடந்தன

முற்றத்தில் உன் ஆசை கொண்ட முகம்போல்

முடிந்துபோன தவறுகளை

அடுக்காதே -அவை உலர்துபோன மலர்கள்

காலம் ஒரு நதி

காலம் ஒரு சொல்

காலம் ஒரு நியதி

உனக்காக இன்னும் பிரிக்கப்படாமல் உள்ளது

என் அன்பின் பரிசு

5

மௌனங்கள் உன்மீது பிரியங்களை தந்தன

அந்த மழை இரவின் மத்தியில் உன்னை அழைத்தேன்

பெருவலி கொண்ட என்மனத்தின் குரலை நீ கேட்ட தொடங்கினாய்

நீ ஒரு

வண்ணத்துபூச்சி ,

மலைகாற்று,

நதி,

நான் எழுத நினைத்த கவிதை

உன் வார்த்தைகளின் வண்ணத்துபூச்சி எபோது வரும் ........

புரிந்துகொள்ள முடியாத என் அன்பின் ரயில் வண்டி

நின்றுகொண்டிருப்பது உன் வாவியில்